RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சங்க இலக்கியங்களில் உள்ள உணவுக்கொடை

**தூ.ச. இந்து** [அ, *]

[அ] நூலகர், மதுரை காந்தி என்.எம்.ஆர்.சுப்புராமன் மகளிர் கல்லூரி தமிழ்நாடு, இந்தியா.

# Food Donation in Sangam Literature

**D.S. Indu** [a, *]

[a] Librarian, Madurai Ghandhi N M R Subburaman Women College Tamil Nadu, India

* Corresponding Author: induds@gmail.com

Received: 10-04-2024
Revised: 12-06-2024
Accepted: 23-06-2024
Published: 30-07-2024

Check for updates

## ABSTRACT

The message of hospitality in Sangam literature is a rare gooseberry given by Adhiyaman to Avvai. This is called first food donation or hospitality. Avvaiyar's song of Avvaiyar who got gooseberry, Holding a sword in the mouth Kalampatak Kazhal thozhak Thadakkai (Purananooru, 91) this can be seen from the song. Our Sangam literature contains information about "charity". The food donation of our Tamils is innumerable. In the ancient Tamil way of life, the word hospitality can also be called food gift. The topic of the article I have taken up here is about the food donation.

**Keywords:** Adhiyaman, Sangam Literature, Charity

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல் பற்றிய செய்தி அதியமான் ஔவைக்கு கொடுத்த அபூர்வ நெல்லிக்கனி ஆகும். இதை முதல் உணவுக்கொடை அல்லது விருந்தோம்பல் எனலாம். நெல்லிகனியை பெற்ற ஔவையார் பாடிய தீந்தமிழ் பாடல்,

"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்

களம்படக் கடந்த கழல்தொழக் தடக்கை" (புறநானூறு, 91)

என்ற பாடலின் மூலம் அறியலாம். நம் சங்க இலக்கியங்களில் "கொடை" பற்றிய செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. அதிலும் நம் தமிழர்களின் உணவுக்கொடை எண்ணிலடங்காதது. பண்டைய தமிழர்களின் வாழ்வியலோடு விருந்தோம்பல் என்ற சொல்லை உணவுக்கொடை என்றும் சொல்லலாம். அம்மதிரியான உணவுக்கொடை பற்றிய பதிவுகளே இங்கு நான் எடுத்துக்கொண்ட கட்டுரைத்தலைப்பு.

## நம் உணவுப்பண்பாட்டின் அடித்தளம் கோயில்கள்

நம் தமிழ் மன்னர்கள் பல பெரும் கோயில்களை கட்டி வைத்துள்ளனர். அதன் நோக்கம் என்னவெனில் அவர்களின் பெயரும் புகழும் ஓங்குவதற்க்காக மட்டும் அன்றி குடிமக்களின் வாழ்வாதாரத்தை பாத்துக்காப்பதும் தான் அவர்களின் ஒரே நோக்கமாக கொண்டனர். விவசாயிகள் தங்களின் தானியங்களை சேமிக்க கோயில்களை பயன்படுத்தினர். (எ. கா.) இன்றளவும் ஸ்ரீரங்கம் கோயிலில் தானியம் கோபுரங்கள் உள்ளது. நில உரிமையாளர்கள் தனியங்களை கொடையாக கொடுத்தால் புண்ணியம் கிடைக்கும் என்ற கருதியதால் தனியங்களை கொடையாக வழங்கினர்கள்.

அந்த தனியங்கள் பஞ்ச காலங்களில் மக்களுக்கு அளித்து பசியாற்றினர். கோயிலில் பிரசாதமாக கடவுளுக்கு படைக்கப்படுவதே மக்களின் உணவுப்பசியை தீர்க்கத்தான். அதுவும் கோயில்பிராசத்தை உண்டால் மக்களின் மனமும், உடலும் ஆனந்தம் அடையும். (எ. கா.) நாம் முதலில் பிள்ளையாரை கொண்டு ஆரம்பிக்கலாம். கணபதிக்கு பிடித்தமானது மோதகம், அவல், சர்க்கரைப்பொங்கல், அப்பம், கொண்டைக்கடலை இவைகளை பிரசாதமாக வாங்குவந்தால் பாமர மக்களும் பசியாருவதுடன் அந்த உணவின் சுவையையும், சத்துகளையும் பெற முடிகிறது. வெறும் பலங்கஞ்சி அருந்தும் மக்கள் (எ. கா.) சர்க்கரைப்பொங்கலில் உள்ள பாசிப்பருப்பில் புரதசத்து, நெய் மற்றும் முந்திரி, காய்ந்த திராச்சை ஆகிய கூட்டுப்பொருளின் சத்துக்களும் அவர்களுக்கு சென்றடையும்.

## உணவுக்கொடை அல்லது விருந்தோம்பலின் மேன்மைகள்

விருந்தோம்பல் என்பது நம் இந்தியக்காலாச்சாரத்தில் இரத்த அணுக்கலில் ஊறிய ஒன்றாகும். திரேதாயுகத்தில் இருந்து தொன்று தொட்டு வருகிறது. ராமன் காட்டுக்கு வரும்போது குகன் என்ற வேடுவன் (கங்கை நதியில் படகு விடுபவன்) வந்து வணங்குகிறான். முனிவர்களின் குடிலில் தங்கியிருக்கும் ராமனுக்கு குகன் தேனும் மீனும் கொண்டு விருந்து உபசரிக்கு அழைக்கிறான். உன்னை கண்ட ராமன் மனம் நெகிழ்ந்து குகனை ஆரத் தழுவி தன் தம்பியாக அவனை ஏற்றுக் கொள்கிறான்.

"இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன் எல்லை நீத்த

அருந்தியன் தேனும் மீனும் அமுத்தினுக்கு அமைவதாகத்

திருத்தினெண் கோணர்ந்தேன் என்கொல் -திருவுளம் என்ன வீரம்

விருத்த மாதரை நோக்கி முருவாளன் விளம்பலுற்றான்" (நூல்: கம்பராமாயணம், அ. அறிவொளி, 1996வது பாடல்)

## வேளாண்மைக்கு தேவையான நீர் சேமிக்கும் முறை

நீரை சேமிக்க நம் அரசர்கள் பல வழிகளை பயன்படுத்தினர். திருச்சி மாவட்டம் உய்யகொண்டான் ஆற்றின் கரையில் சோழமாதேவி என்ற கிராமம் உள்ளது. இவ்வூர் கோவிலிலுள்ள கல்வெட்டில் உய்யகொண்டான் ஆற்று வாரியம் என்ற அமைப்பு உள்ளதை சுட்டிக்காட்டுகிறது. ஏரியில் தண்ணீர் வெளியேறுவதற்கு நீரை முறைப்படுத்தி அனுப்பி உள்ளனர். மடைகலிங்கு, மதகு, தூம்பு, குமிழி போன்ற அமைப்புகள் உள்ளன. ராஜச்சோழர் என்ற ஆதித்த சோழன் காலத்தில் குண்டூரை சேர்ந்த பெருந்தட்டான் மாறன் குவாவன் என்பவனால் திருச்சி புதுக்கோட்டை சாலையில் ஒரு பெரிய ஏரி அமைக்கப்பட்டது. திருமலைப்பாடிக்கு அருகே செம்பியன் மாதேவி 'பேரேரி' என்ற பெயரில் ஒரு ஏரி இருந்தது. இந்த ஏரியில் ராஜராஜன் தூம்பு என்ற மதகு வழியாக ராஜராஜன் வாய்க்காலில் நீர் சென்றதையும் குறிப்பிடப்படுகிறது. திருப்பாற்கடல் மற்றும் காவேரிப்பாக்கம் என்ற கல்வெட்டுக்கலால் கலிங்கு வாரியம் என்ற அமைப்பு இருந்ததை அறியலாம். ஏரியில் இருந்து மீன் பிடிக்க வரி விதிக்கப்பட்டு அந்த நிதி ஏரியை ஆழப்படுத்த பயன்பட்டது. ஏரியை பாதுகாக்க தானமாக வழங்கப்பட்ட நிலத்தை ஏரிப்பட்டி எனவும் குளங்களை பாதுகாக்க குளப்பட்டி அல்லது குளபுரம் எனவும் வழங்கப்பட்டது. இப்படி நம் மன்னர்கள் பெரும் வானிகர்கள் தண்ணீரை சேமிக்க பலவழிகளை கையாண்டுள்ளனர். இவை தினமலரில் கி. ஸ்ரீதரன் என்பவர் அளித்த செய்திகளில் உள்ளது.

## சங்க இலக்கியத்தில் வேளாண் பெருக்குதல்

நிலங்களை ஐந்து வகைகளாக தொல்காப்பியம் பிரித்துள்ளது அவை

1. மலையும் மலை சார்ந்த இடமும் - குறிஞ்சி
2. காடும் காடு சார்ந்த இடமும் - முல்லை
3. வயலும் வயல் சார்ந்த இடமும் - மருதம்

4 கடலும் கடல் சார்ந்த இடமும் - நெய்தல்
5 மணலும் மணல் சார்ந்த இடமும் - பாலை

குறிஞ்சி, முல்லை, பகுதிகளில் உள்ள நிலம் கரடு முரடானவை. நீர் குறைந்து இருப்பத்தாலும் அவற்றை வன்புலம் என்றனர்.

'வன்புலக் காட்டுநாட் டதுவே' (நற்றிணை 59)

நீர்வளம் அதிகமாக இருப்பத்தாலும், வேளாண்மை செய்ய ஏற்ற நிலமாக இருக்கும் மருதம் நிலத்து மண்ணை மென்புலம் என்று அழைத்தனர்.

'மென்புல வைப்பின் நல் நாட்டுப் பொருந்' (புறம் : 42-15)

இயற்கையின் நீர்ப்பசன வசதி இல்லாமல் மனிதனால் வெட்டப்பட்ட கிணறு, குளம் போன்ற பாசனவசதி ஏற்படுத்தப்பட்ட நிலத்தினை புன்புலம் என்று அழைத்தனர்.

'புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்' (பதிற்றுபத்து 58 -15)

வேளாண்மைக்கு உதவாத நிலத்தினை களர்நிலம் என்றனர். புறநானுறு இதை புறங்காடு என்று குறிப்பிடுகிறது.

'களர்படு கூவல் தோண்டி, நாளும்

புலைத்தி கழ்இய தூவேள் அறுவர்' (புறநானுறு 311-1, 2)

நிலத்தின் தன்மை அறிந்து அதற்கேற்ப விவசாயம் செய்தனர். ஏர்பூட்டி உழுவதால் மண்ணிற்கு காற்றோட்டம் கிடைக்கிறது. உழுகின்ற போது ஏற்படும் மேடு பள்ளங்களை சமன்செய்ய தளம்பு என்ற கருவியை பயன்படுத்தினர்.

'மலங்கு மிளிர் செருவின் தளம்பு தடித்து இட்ட' (புறநானுறு 61-3)

உழுத நிலத்திற்கு எருவாக சாணத்தையும், இலைதழைகளையும் பயன்படுத்தினர். விதைகளை எப்படி பயன்படுத்தினர் என்பதை புறநானுற்றில்

'குறித்து மாறு எதிர்ப்பை பெறாஅமையின்

குரல் உணங்கு விதைத்தினை விதைத்தினை' (புறநானுறு : 333-11, 12)

## சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

உணவுக்கொடையை நாம் முதலில் மணிமேகலை காப்பியத்தின் மூலம் அறியலாம்.

'அறம் எனப்படுவது யாது? எனக் கேட்பின்

மறவாது இதுகேள்: மண்ணுயிற்கு எல்லாம்

உண்டியும், உடையும், உரையுளும் அல்லது கண்டது இல்.'

ஒரு மனிதனுக்கு அல்லது உலகில் உள்ள எல்லா ஜீவரசிகளுக்கு முக்கியமானது உணவு, அதிலும் ஆறறிவு படைத்த மனிதனுக்கு உணவும், உடுக்க உடையும் அவன் மழை, வெயில் மற்றும் மிருகங்களிடமிருந்து காத்துக்கொள்ள உரையுள்ளும் தேவை ஆகும். இது தான் மனிதனுக்கு நல்ல அறமாக கருத்தப்படுகிறது.

மக்களுக்கு பிறவிகள் தோறும் தொடரும் நல்வினை என்ற கோட்பாட்டை நம் முன்னோர்கள் வகுத்தனர். ஆதலால் கொடை வழங்கினால் இப்பிறவி துன்பதிலிருந்து விடுபடலாம் ஆனால் ஈகை ஆகாது. இது வாணிப நோக்காக செய்யப்படுவது ஆகும். இத்தனையே குறுந்தொகையில்

"நல் இசை வேட்ட நாயனுடைய நெஞ்சின்

கடப்பாட் டாளனுடையப் பொருளப்போல"

என்று நக்கீரர் பாடியுள்ளார்.

## சங்க இலக்கியத்தில் தொன்மையான உணவுப்பழக்கம்

பிறந்த குழந்தையிடமிருந்து உணவுப்பழக்கம் தொடங்குகிறது. முதன் முதலில் குழந்தைக்கு உணவூட்டல் என்பதை ஒரு விழாவாகவே கொண்டாடுவார். நெருங்கிய உறவினரை அழைத்து குலதெய்வ கோவிலில் கத்து உணவூட்டுவர். அரிசியை மிகக் குழைவாக வேகவைத்து இருப்பார்கள். அதில் சிறிது நெய்யை கலந்து உணவை ஊட்ட முயன்று குழந்தை கையால் அதை வாங்கி உண்ணும் போது பாதி வாயிலும் மீதி வயிற்றிலும் சிந்தி இருக்கும் இதை பாண்டியன் அறிவுடை நம்பி பாடியது.

“குறு நடந்து சிறுகை நீட்டி,

இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,

நெய்யுடை அடிசில் மெய் பட விதிர்த்தும்

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்

பயக் குறை இல்லை - தாம் வாழும் நாளே.

திணை: பொதுவியல், துறை - பொருன்மொழிக்காஞ்சி”

குழந்தைக்கு உணவு ஊட்டும் போது நிலாவைக்காட்டி சோறு ஊட்டினர். காரணம் என்னவெனில் குழந்தை அண்ணார்ந்து பார்க்கும் போது அதன் உணவுகுழாய் விரிவாடையும், உணவும் சிரமமின்றி உள்ளே செல்லும். அதனால் நிலாவைக்காட்டி சோறுட்டினர். வளரும் பருவத்தில் புரதசத்து நிறைந்த உணவினை கொடுத்தனர். வளரிளம் பருவத்தில் இறைச்சி, முட்டை, பால், உளுந்தங்களி போன்றவற்றை கொடுத்தனர். பின்பு அவள் குடும்பதலைவியாக இருக்கும் போது வருகிற இரவலரை வரவேற்க

"குய் குரல் மலிந்த கொழுந் துவை அடிசில்

இரவலர்த் தடுத்த வாயில் புரவலர்” உரை-கு. வே. பாலசுப்பிரமணியம்

குய் என்பது தளத்தில் கொழும் துவை என்பது கொழுத்த மாமிசம் போட்ட கொளகொள வென்ற குழம்பு. தாளித்த ஓசையுடன் கூடிய கொழுத்த ஊன் குழம்பும் குழைத்த சோறும் இரவலரைப் போகவிடாமல் தடுக்குமாம் அதன் வாசனை.

கடைஏழு வல்லல்களின் ஒருவனான குமணன் என்ற அரசன் தன்னை நாடி வரும் இரவலர்களுக்கு பொன்னானலான வட்டிலில் இந்த கொழும் துவையை நெய்யுடை அடிசிலோடு அளித்தலை பெருஞ்சித்தனார் புலவர் பாடுகிறார்.

“குய் கொள் கொழும் துவை நெய்யுடை அடிசில்

மதி சேர் நாள்-மீன் போல நவின்ற

சிறு பொன் நன் கலம் சுற்ற இரீஇ” (புறநானுறு 160-7, 9)

## முடிவுரை

விருந்தோம்பல் என்பது சங்க காலத்தில் உறவினர்கள் அல்லாத தெருவில் தன்னை நாடி வருவோற்கெல்லாம் உணவு படைத்தனர். மனிதன் கோயிலில் நேர்ந்து விடுகிற பழக்கம் அனைவரும் உண்ண வேண்டும் என்பதே ஆகும். நம் பழந்தமிழர்கள் இத்தகைய உணவுக்கொடைகளை கொண்டிருந்தனர். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் 'மெஸ்' இயங்கி வந்தது. குடும்பப்பாங்கான உணவு கிடைத்தது. தற்போது நகர்மயமாக்களில் அத்தொழிலை யாரும் செய்வதில்லை.

"வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்."

என்று வள்ளலார் குமுறுகிறார். உணவு சேமித்த காலங்கள் போய் உணவுப்பொருட்கள் பதுக்கல் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு பொய்யான விலைவாசி ஏற்றம் ஏற்படுத்தப்படுகிறது. அரசாங்கம் இதற்கு ஒரு நல்ல தீர்வை கொண்டுவர வேண்டும். நம் சந்ததிகளின் நலனுக்காக விவசாயம், விவசாயி காப்பாற்றப்பட வேண்டும். அடுத்த தலைமுறையினருக்கு வேளாண் மகத்துவத்தை கற்றுத்தர வேண்டும்.

## References


புறநானூறுச் சிறுகதைகள், ஆசிரியர் நா. பார்த்தசாரதி, 1978.

நூல்: சங்க இலக்கியம் மூலமும் உரையும் நற்றிணை-59, ஆசிரியர்: கபிலர், உரை: கு. வே. பாலசுப்பிரமணியன், பக்கம்: 105

நூல்: சங்க இலக்கியம் திணை: அரசவாகை மூலமும் உரையும் ஆசிரியர்: இடைக்காடானார் புறநானூறு உரை: கு. வே. பாலசுப்பிரமணியன் பக்கம்: 117:4வது, 2011

நூல்: சங்க இலக்கியம் மூலமும் உரையும், பதிற்றுபத்து 58 -15, உரை: முனைவர் அ. ஆலிஸ் பக்கம்: 200.

நூல்: சங்க இலக்கியம், புறநானூறு 311-1,2 உரை: கு. வே. பாலசுப்பிரமணியன் பக்கம்: 681, 2011, பாடியவர்: ஔவையார்.

நூல்: சங்க இலக்கியம் மூலமும் உரையும் புறநானூறு 61-3, பக்கம்: 161,4வது 2011, உரை: கு. வே. பாலசுப்பிரமணியம்.

நூல்: சங்க இலக்கியம் மூலமும் உரையும், புறநானூறு: 333-11,12, பக்கம்: 725,4வது 2011.

நூல்: சீத்தலைசாத்தனார் இயற்றிய மணிமேகலை தெளிவுரையுடன், உரை ஆசிரியர்: துரை. தண்டபாணி, உமா பதிப்பகம்.

நூல்: சங்க இலக்கியம், குறுந்தொகை, உரையாசிரியர் : முனைவர் வி. நாகராசன்.

நூல்: புறநானூறு சங்க இலக்கியம் மூலமும் உரையும் உரை: வே. பாலசுப்பிரமணியன்

நூல்: சங்க இலக்கியம் புறநானூறு, உரை: கு. வே. பாலசுப்பிரமணியன், புலவர்: பெருஞ்சித்திரனார்.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License